பதிப்புரிமை ஆசிரியருக்கே/*All Rights to Author* புதிய பாடத்திட்டம் / *New Syllabus*

NEW **GEOGRAPHY EXAMINATION**

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரி வினாத்தாள், 2020 ஓகஸ்ற்

**General Cerificate of Education (Adv. Level) Model Paper, August 2020**

புவியியல் I
**Geography I**

**22 T I**

*மூன்று மணித்தியாலம்*
***Three hours***

மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
**Additional Reading Time - 10 minutes**

வினாப் பத்திரத்தை வாசித்து வினாக்களைத் தெரிவு செய்வதற்கும், விடையெழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

ஆசிரியர்: திரு.ஏ.கஜன் B.A Tamil (R)
077 2400 707 / 076 8044 959

**MODEL PAPER 2**
**மாதிரி வினாத்தாள்**

**அறிவுறுத்தல்கள்:**

சுட்டெண்:..................................................

- இவ் வினாத்தாள் **மூன்று** பகுதிகளைக் கொண்டது. பகுதி **I, 40** பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது. பகுதி **I** இற்கான விடைகள் **இவ் வினாத்தாளிலேயே** எழுதப்பட வேண்டும்.
- பகுதி **I** இல் ஒவ்வொரு சரியான விடைக்கும் **ஒரு** புள்ளிவீதம் உரித்தாகும்.
- பகுதி **II** இல் உள்ள **இரண்டு** வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.
- பகுதி **III** இல் **நான்கு** வினாக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **இரண்டு** வினாக்களைத் தெரிவுசெய்து விடையளித்தல் வேண்டும்.
- பகுதி **I,** பகுதி **II,** பகுதி **III** ஆகியவற்றுக்குரிய விடைத்தாள்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு கையளிக்கப்பட வேண்டும்.
- இவ் வினாத்தாளுக்கு விடையளிப்பதற்காக, இலங்கையின் **1:50000** அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கப் படத்தின் ஒரு பகுதியும், உலகப் புறவுருவப் படமும், வரைபுத்தாள் ஒன்றும் வழங்கப்படும்.

**பரீட்சகர்களின் உபயோகத்திற்கு மட்டும்**


| | வினா இல. | புள்ளிகள் |
|---|---|---|
| பகுதி-I | 1 - 40 | |
| பகுதி-II | 1 | |
| | 2 | |
| பகுதி-III | 1 | |
| | 2 | |
| | 3 | |
| | 4 | |
| மொத்தம் | | |

| | கையொப்பம் | குறியீட்டு எண் |
|---|---|---|
| முதலாவது பரீட்சகர் | | |
| இரண்டாவது பரீட்சகர் | | |
| மேலதிக பிரதம பரீட்சகர் | | |
| பிரதம பரீட்சகர் | | |
| கணிதப் பரிசோதகர் | | |


**பகுதி I**

- **ஒவ்வொரு வினாவுக்குமான சரியான விடையைத் தெரிவு செய்து, அதற்குரிய இலக்கத்தினைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**


**1.** தரைத்தோற்றத்தின் **மூன்று** அம்சங்களைக் காட்டும் வரைபடங்கள் கீழே **A, B, மற்றும் C** ஆகிய எழுத்துக்களால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றின் பெயர் ஒழுங்கைச் **சரியாகத்** தரும் விடைத் தொகுதி.



**A**



**B**




**C**

(1) குவிவுச் சாய்வு, மலையிடுக்கு, மேட்டுநிலம்
(2) குழிவுச் சாய்வு, குவிவுச் சாய்வு, கூம்புக்குன்று
(3) குவிவுச் சாய்வு, குழிவுச் சாய்வு, கூம்புக்குன்று
(4) குத்துச் சாய்வு, குழிவுச் சாய்வு, கூம்புக்குன்று
(5) குழிவுச் சாய்வு, குவிவுச் சாய்வு, மேட்டுநிலம் **(…..)**

**2.** நிலநடுக்கோடு ஊடறுத்துச் செல்லும் **இரு** கண்டங்களாவன.
(1) ஐரோப்பா, ஆசியா
(2) அவுஸ்ரேலியா, ஐரோப்பா
(3) தென் அமெரிக்கா, ஆபிரிக்கா
(4) வட அமெரிக்கா, தென் அமெரிக்கா
(5) அவுஸ்ரேலியா, ஆபிரிக்கா **(…..)**

**3.** அருகில் காட்டப்பட்டுள்ள படத்தில் **A, B** எனக் குறிக்கப்பட்டுள்ள நீரோட்டங்கள் **முறையே.**




(1) அகுகாஸ், பெங்குவெலா
(2) பெங்குவெலா, பிரேசிலியன்
(3) பெங்குவெலா, அகுகாஸ்
(4) லிபிறடோர், பெங்குவெலா
(5) பெங்குவெலா, கம்போல்ட் பேரு **(…..)**

**4.** தரவுத்தொகுதியில் **7, 11, 12, 21, 27, 31, 31** ஆகிய பெறுமானங்களில் காணப்படும் இத் தொகுதியில் ஆகாரம், இடை, இடையம், வீச்சு என்பன **முறையே.**
(1) 31, 27, 20, 24
(2) 31, 20, 21, 24
(3) 25, 20, 21, 20
(4) 21, 20, 31, 24
(5) 31, 20, 27, 24 **(…..)**

**5.** $SD = \sqrt{\frac{\Sigma\ (x - x)^2}{2}}$ என்ற சூத்திரத்தின் மூலம் கணிப்பிடப்படுவது.
(1) நியமவிலகல்
(2) மாறற்திறன்
(3) உத்தேச இடை
(4) சராசரி விலகல்
(5) இடைக்காலணை வீச்சு **(…..)**

**6.** அப்பலாச்சியன் மலை, ஏஞ்சல் நீர்வீழ்ச்சி, ரைன் நதி, கோபிப் பாலைவனம், அயர் ஏரி என்பன காணப்படும் நாடுகள் **முறையே.**
(1) ஐக்கிய அமெரிக்கா, பொலிவியா, ஜேர்மனி, மொங்கோலியா, அவுஸ்ரேலியா
(2) அவுஸ்ரேலியா, மொங்கோலியா, ஜேர்மனி, பொலிவியா, ஐக்கிய அமெரிக்கா
(3) ஐக்கிய அமெரிக்கா, மொங்கோலியா, ஜேர்மனி, அவுஸ்ரேலியா, பொலிவியா
(4) அவுஸ்ரேலியா, மொங்கோலியா, ஜேர்மனி, பொலிவியா, ஐக்கிய அமெரிக்கா
(5) ஜேர்மனி, ஐக்கிய அமெரிக்கா, பொலிவியா, மொங்கோலியா, அவுஸ்ரேலியா **(…..)**


**7.** பின்வரும் விடைகளுள் எது புவியியல் தகவல் ஒழுங்கு செயன்முறை **முழுவதையும்** சரியாகக் குறித்துக் காட்டுகின்றது?
(1) யதார்த்த உலகின் பௌதிக மற்றும் மானிடப் புவியியல் தகவல்களைச் சேமித்து வைத்தல்.
(2) பண்பு ரீதியான அட்டவணையொன்றில் இடம்சார்ந்த மற்றும் இடஞ்சாராத் தரவுகளை உள்ளீடு செய்தல்.
(3) ஸ்கான் (Scan) செய்யப்பட்ட படமொன்றினைப் பயன்படுத்தி தேசிய ஆள்கூற்று முறைமையில் படமொன்றினை அமைத்தல்.
(4) கணனி முறைமையின் மூலம் புவியியல் தரவுகளைச் சேமித்து வைத்தல், கையாளுதல், பகுப்பாய்வு செய்தல், நிர்வகித்தல், முன்வைத்தல்.
(5) படவரைகலையியல் முறைகளைப் பயன்படுத்தி புவியியல் தரவுகளைச் சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல், படமொன்றினை முன்வைத்தல். **(…..)**

**8.** **1:50000** எனும் இடவிளக்கப் படத்தின் **92** பிரிவுகளில் முதலாவது **மற்றும்** இறுதியான படப்பிரிவுப் பிரதேசங்கள் **முறையே.**
(1) மானிப்பாய், தங்காலை
(2) பருத்தித்துறை, மாத்தறை
(3) கச்சதீவு, தங்காலை
(4) மானிப்பாய், மாத்தறை
(5) தங்காலை, மானிப்பாய் **(…..)**

**9.** உலகின் மிகப் பழமை வாய்ந்த தேசப்படமாகக் **கருதப்படுவது**
(1) களிமண்தட்டில் வரையப்பட்ட அலெக்ஸாந்திரியா நகரத் திட்டப்படம்.
(2) பைப்பிரஸ் புல்லில் வரையப்பட்ட கெய்ரோ நகரத் திட்டப்படம்.
(3) களிமண்தட்டில் வரையப்பட்ட மொஸப்பத்தேமிய நகரத் திட்டப்படம்.
(4) பைப்பிரஸ் புல்லில் வரையப்பட்ட மொஸப்பத்தேமிய நகரத் திட்டப்படம்.
(5) பைப்பிரஸ் புல்லில் வரையப்பட்ட யூப்பிரட்டீஸ் நகரத் திட்டப்படம். **(…..)**

**10.** தேசப்படமொன்றின் அடிப்படை இயல்புகளில் சட்டகத்திற்கு **வெளியே** அமைந்துள்ள விடயங்களாவன
(1) இடத்தின் பெயர், குறியீடுகள், திசை, மூலம்
(2) அளவுத்திட்டம், சட்டகம், திசை, நிறங்கள்
(3) திசை, மூலம், தலைப்பு, அளவுத்திட்டம்
(4) திசை, தலைப்பு, மூலம், குறியீடு
(5) அளவுத்திட்டம், குறியீடு, நிறங்கள், திசை **(…..)**

**11.** கீழே **A**, **B**, **C**, **D** என அடையாளம் செய்யப்பட்டுள்ள வரைபடங்களில், வடவரைக் கோளத்தில் இயங்கும் சூறாவளிகளினதும், முரண் சூறாவளிகளினதும் சுழற்சியினைக் காட்டும் படங்கள் **முறையே**





(1) A, B (2) B, C (3) A, D (4) C, D (5) C, B **(…..)**

**12. 'பரற் பாறை'** என்பது
(1) கூரான பெரிய துண்டுகளைக் கொண்ட பாறை.
(2) களிமண் சார்ந்த அடையல்கள் இறுக்கமடைந்து தோன்றிய பாறை.
(3) மண்ணாலான அடையல்களின் படிவினால் தோன்றிய பாறை.
(4) உருண்டை வடிவத்தைக் கொண்ட பெரிய பாறை.
(5) வண்டல் மண்ணின் படிவினால் தோன்றிய பாறை. **(…..)**

**13. 'லக்கோலித் (Lacolith)'** என்பது.
(1) அயன வலயத்து செம்பூரான் மண்.
(2) பாறைக் குழம்பின் உள்ளீட்டினால் புவி மேற்பரப்பின் கீழ் உருளை வடிவில் உருவாகும் தீப்பாறைகள்.
(3) பாறைக் குழம்பின் உள்ளீட்டினால் புவி மேற்பரப்பின் கீழ் உருவாகும் தீப்பாறைகள்.
(4) பழுப்பு நிலக்கரிப் படிவுகள்.
(5) காற்றரிப்புச் செயற்பாட்டால் உருவாகத்தக்க ஓர் படிதல் நிலவுருவம். **(…..)**

**14.** அருகில் காட்டப்பட்டுள்ள படத்தில் **A மற்றும் B** ஆகிய எழுத்துக்களால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள புறம்பிறந்த விசை நிலவுருவங்கள் **முறையே.**




(1) **A** குகை **B** அடிக்கட்டை
(2) **A** வில்வளைவு **B** சிறுபாறைத் தீவு
(3) **A** வில்வளைவு **B** அடிக்கட்டை
(4) **A** குகை **B** கூர்நுனி உச்சி
(5) **A** குகை **B** சிறுபாறைத் தீவு **(…..)**

**15.** கெப்பனின் காலநிலைப் பாகுபாட்டின்படி, அயன மழைக்காட்டுக் காலநிலையைக் குறிக்கும் **Af** என்பதில், **A** என்ற எழுத்தும், **f** என்ற எழுத்தும் குறிக்கும் விடயங்கள் **முறையே.**
(1) **A** - ஈரத்தன்மை, **f** – வெப்பம் (2) **A** - மழைவீழ்ச்சி, **f** - ஈரப்பதன்
(3) **A** - வெப்பம், **f** – மழைவீழ்ச்சி (4) **A** - வெப்பம், **f** - ஈரத்தன்மை
(5) **A** - மழைவீழ்ச்சி, **f** – உலர்பருவம் **(…..)**

**16.** இலங்கையின் மொத்தத் தரையமைப்பில் நிலச்சரிவு ஏற்படும் **சாத்தியமுள்ள** நிலப்பரப்பின் அளவு.
(1) 20000 $km^2$ (2) 10000 $km^2$ (3) 30000 $km^2$
(4) 40000 $km^2$ (5) 14500 $km^2$ **(…..)**

**17.** **"பகுதி உருகுதல் (Partial melting)"** என்பது.
(1) பாறை வட்டச் செயன்முறை
(2) மக்மாவை தோற்றுவிக்கும் செயன்முறை
(3) வெப்ப உருமாற்றச் செயன்முறை
(4) அடையற்பாறைகள் உருவாகும் செயன்முறை
(5) பனிக்கட்டியாற்றுப் பிரதேசத்தில் உயர் வெப்பம் காரணமாக பனி உருகும் செயற்பாடு **(…..)**

**18.** இலங்கையில் அவதானிக்கத்தக்க கண்டல் தாவரங்களின் **எண்ணிக்கை.**
(1) 55 (2) 53 (3) 23 (4) 16 (5) 46 **(…..)**

**19.** கீழே **A, B மற்றும் C** என **மூன்று** கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. அக் கூற்றுக்களுடன் தொடர்புபட்ட விடயத்தினை **ஒழுங்கு முறையில்** தரும் விடையினைத் தெரிவு செய்க.
**A** - மலைப் பனிக்கட்டியாறு உருவாக்கிய U வடிவப் பள்ளத்தாக்கில் காணப்படும் பீடங்களில் இடப்பட்டுள்ள பாறைகள்.
**B** - எகிப்து, லிபியா ஆகிய நாடுகளில் காணப்படும் கற் பாலைவனம்.
**C** - காளான் வடிவப் பாறைகளின் அடிப்பகுதி காற்றினால் அரிக்கப்படுதல்.
(1) (A) ஐயநிலைப்பட்ட பாறைகள் (B) செரீர் (C) அடியறுத்தல்
(2) (A) மொரன்கள் (B) கூம் (C) அடிவெட்டல்
(3) (A) ஐயநிலைப்பட்ட பாறைகள் (B) றெக் (C) அடிவெட்டல்
(4) (A) கியூக்கன்ஸ் (B) ஏர்க் (C) அலையுடைப்பு
(5) (A) ரில்பிளேயின் (B) செரீர் (C) அடியறுத்தல் **(…..)**

**20.** அல்ப்ஸ் மலைத்தொடர் பகுதிகளில் வீசுகின்ற **ஓரிடக்காற்று.**
(1) ∴போன் (2) ஹுமட்டன் (3) யாமோ
(4) சினூக் (5) நெவாடா **(…..)**

**21.** இலங்கையின் மண் பரம்பல் பாங்கில், ஈர வலயத்திற்குரிய மண் வகைகளைக் **கொண்டமைந்த** விடை.
(1) செம்மஞ்சள் நிற மண், கல்சியமற்ற கபில நிற மண்
(2) செம்மஞ்சள் பொட்சோல் மண், லற்றசோல் மண்
(3) கல்சியமற்ற கபில நிற மண், லற்றசோல் மண்
(4) செம்மஞ்சள் நிற மண், லற்றசோல் மண்
(5) லற்றசோல் மண், கல்சியம் நிறைந்த செம்மஞ்சள் மண் **(…..)**

**22.** ஆற்றுமுகப் பகுதியில் அதிகளவிலான வருட சராசரி மழைவீழ்ச்சியைப் பெற்றுக்கொள்ளும் இலங்கையின் நதியாக **அமைவது.**
(1) களுகங்கை (2) களனி கங்கை (3) ஜின் கங்கை
(4) மஹா ஓயா (5) கல்லோயா **(…..)**

**23.** இலங்கையில் புவிநடுக்கத்தினை அளவீடு செய்யும் மையம் அமையப்பெற்றுள்ள **இடம்.**
(1) காலி (2) திஸ்ஸமகரகம (3) ஹம்பாந்தோட்டை
(4) பீதுறுதாலகால (5) பல்லேகல **(…..)**

**24.** அண்டார்ட்டிக்காவின் **வெடெல் (Weddel Sea)** கடல் பிரபல்யம் பெறக் காரணம்.
(1) விஞ்ஞான ரீதியான ஆய்வு விருத்திப் பகுதி.
(2) சுற்றுலாத்துறை விருத்தியடைந்திருத்தல்.
(3) அருகிவரும் விலங்கினங்கள் தொடர்பில் பாதுகாக்கப்பட்டுவரும் பகுதி.
(4) பெற்றோலிய அகழ்வு இடம்பெறும் பிரதேசம்.
(5) சூழல் இசைவாக்க விலங்கினங்களின் அமைவிட முக்கியத்துவம். **(….)**

**25.** பின்வருவனவற்றுள் பாதாளப் பாறைகளின் (தீப்பாறை) இயல்பாகக் **கருதக்கூடியது.**
(1) பாதாளப் பாறையாகப் பெருமளவு காணப்படுவது கிரனைற் பாறையாகும்.
(2) கரடுமுரடான பெரிய மணிகளைக் கொண்ட அமைப்புடன் இவை காணப்படும்.
(3) குவாட்சு, பிளசியோகளேசு, பெல்ஸ்பார் முதலிய கனிமங்களை அதிகளவில் கொண்டிருக்கும்.
(4) இளம் நிறத்தைக் கொண்டிருத்தல்.
(5) மேற்கூறிய கூற்றுக்கள் யாவும் சரியானவையாகும். **(….)**

**26.** எதிர்வரும் **2030** ஆம் ஆண்டளவில் இலங்கையின் முதியோர் சனத்தொகையின் எதிர்வுகூறல் (பேருக்கு).
(1) 8 : 1 (2) 4 : 1 (3) 4 : 2 (4) 8 : 2 (5) 10 : 2 **(…..)**

A.Kajan - A.Kajan

**27.** **'நிகரதேறிய இடப்பெயர்வு'** என்பது.
(1) குடிவரவிற்கும் குடியகல்விற்கும் இடையிலான வேறுபாடு.
(2) குடிவரவு, குடியகல்வு என்பவற்றின் மொத்த விளைவு.
(3) மொத்தக் குடித்தொகையின் வீதாசாரமாகவுள்ள குடிவரவாகும்.
(4) மொத்தக் குடித்தொகையின் வீதாசாரமாகவுள்ள குடியகல்வாகும்.
(5) மொத்தக் குடித்தொகையின் வீதாசாரமாகவுள்ள நகரம் நோக்கிய குடிப்பெயர்வாகும். **(.....)**

**28.** தெற்காசிய சுற்றாடல் வேலைத்திட்டம் (SACEP), இயற்கைப் பாதுகாப்பிற்கான சர்வதேச சங்கம் (IUCN), ஐக்கியநாடுகள் சபையின் சுற்றாடல் வேலைத்திட்டம் (UNEP) போன்ற சர்வதேச சூழல் அமைப்புக்களின் தலைமையகம் அமைந்துள்ள நாடுகள், நகரங்கள் என்பன **முறையே.**
(1) இலங்கை – கொழும்பு, சுவிஸர்லாந் - கிலான்ட, கென்யா – நைரோபி
(2) இலங்கை – பத்தரமுல்ல, சுவிஸர்லாந் - ஜெனீவா, கென்யா – மெரு
(3) இலங்கை – மீகொட, சுவிஸர்லாந் - சூரிச், கென்யா – நவ்.ீறூவ்
(4) இலங்கை – மீகொட, சுவிஸர்லாந் - கிளான்ட், கென்யா – மெரு
(5) இந்தியா – புதுடெல்லி, இலங்கை – கொழும்பு, கென்யா – நைரோபி **(.....)**

**29.** பின்வரும் விடைகளுள் பூகோளமயமாக்கலின் **பாதக** விளைவொன்றைப் பிரதிபலிக்கும் விடை **அல்லாதது.**
(1) கைத்தொழில் ரீதியில் வளர்ச்சியடைந்த மற்றும் குறைவிருத்தி நாடுகளுக்கிடையில் ஏற்றத்தாழ்வு நிலை வலுவடைதல்.
(2) அபிவிருத்தியடைந்த நாடுகளிலிருந்து அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு மாத்திரமே பூகோளமயமாதல் பிரயோக ரீதியாகச் செயற்படுதல்.
(2) அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகள் ஏற்றுமதிச் சந்தைக்குள் பிரவேசிப்பதை அபிவிருத்தியடைந்த நாடுகளின் பாதுகாப்புக் கொள்கைகள் கட்டுப்படுத்தி வருதல்.
(3) மூலதனப் பாய்ச்சல், தொழில்நுட்பம், மானிட மூலதனத்தைப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பங்கள் ஏற்படுத்தப்படல்.
(4) உலக வர்த்தகமானது பல்தேசியக் கம்பனிகளுக்கு உச்ச இலாபத்தைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கிலேயே இடம்பெற்று வருதல். **(.....)**

**30.** கனிய எண்ணெய் உற்பத்தி மற்றும் வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தும் **'எக்சோன் மொபில்** (Exxon Mobil)' நிறுவனம் அமையப் பெற்றுள்ள **நாடு.**
(1) நெதர்லாந்து (2) சவுதி அரேபியா (3) பிரித்தானியா
(4) தென்னாபிரிக்கா (5) ஐக்கிய அமெரிக்கா **(.....)**

**31.** இலங்கைக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளில் அதிகளவானோரின் பிரதான நோக்கமாகக் **கொள்ளமுடிவது.**
(1) ஓய்வு மற்றும் பொழுதுபோக்கு (2) வர்த்தக நடவடிக்கை
(3) சுகாதாரத் தேவைப்பாடு (4) விளையாட்டுச் செயற்பாடுகள்
(5) இராஜதந்திர நடவடிக்கைகள் **(.....)**

**32.** இலங்கையிலிருந்து மைக்காக் காரியத்தை அதிகளவில் இறக்குமதி செய்யும் **நாடு.**
(1) ஜப்பான் (2) ஐக்கிய அமெரிக்கா (3) இந்தியா
(4) மலேசியா (5) சீனா **(.....)**

**33.** தென்கிழக்காசிய நாடுகளின் அமைப்பின் ஆரம்பகால அங்கத்துவ நாடுகளைச் **சரியாகத்** தரும் விடை.
(1) இந்தோனேசியா, வியட்நாம், பிலிப்பைன்ஸ், மியன்மார், தாய்லாந்து
(2) இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து
(3) புறூணே, வியட்நாம், கம்போடியா, மியன்மார், லாவோஸ்
(4) புறூணே, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து
(5) இந்தோனேசியா, மியன்மார், கம்போடியா, சிங்கப்பூர், தாய்லாந்து **(.....)**

**34.** பின்வரும் கூற்றுக்களுள் எது **டொன்டோ (Dondo)** என்பதைச் **சரியாக** விளக்குகின்றது?
(1) கரீபியன் பிரதேசத்தில் விருத்தி செய்யப்பட்டுள்ள மத்தியதர வகுப்பினருக்கான வீட்டுத்திட்டம்.
(2) மெக்சிக்கோவில் காணப்படும் ஒரு சேரிக் கொத்தணி.
(3) மணிலாவிலுள்ள ஓர் தாழ் வருமான வீட்டுத் திட்டம்.
(4) கொழும்பில் காணப்படும் சேரிப் பகுதியினருக்கான வீடமைப்புத் திட்டம்.
(5) லீமாவிலுள்ள சட்டவிரோதச் சேரிக் குடியிருப்புகள். **(.....)**

**35.** சர்வதேச உருளைக் கிழங்கு ஆராய்ச்சி நிலையம் அமையப் பெற்றிருப்பது.
(1) மணிலா (2) மெக்சிக்கோ (3) லீமா
(4) நைகர் (5) பாக்கிஸ்தான் **(.....)**

**36.** **"டில்லி பிரகடனம்"** என்பதுடன் தொடர்புபடும் பிராந்திய அமைப்பு.
(1) ஆபிரிக்க பொருளாதார ஆணைக்குழு (**ECA**)
(2) வட அமெரிக்க சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (**NAFTA**)
(3) தெற்காசிய நாடுகளின் பிராந்திய ஒத்துழைப்பிற்கான அமைப்பு (**SAARC**)
(4) தென்னாசிய சுதந்திர வர்த்தகப் பிரதேசம் (**SAFTA**)
(5) தென்கிழக்காசிய நாடுகளின் சங்கம் (**ASEAN**) **(….)**


**37. 125,000** ஆண்டுகளிலேயே இலங்கையில் குடியிருப்புகள் நிலவியமைக்கான சான்றுகள் கிடைக்கப்பெற்ற இடமாக **அமைவது.**
(1) அலவலலென (2) குருவிட்ட (3) வரக்காப்பொல
(4) பாகியன்கல (5) மினிஹாகலகந்த **(…..)**

**38.** இலத்தீன் அமெரிக்க மற்றும் கரீபியன் வலயத்தில் **கூடியளவான** நகராக்கச் சுட்டி கொண்ட **நாடு.**
(1) புருண்டி (2) சிங்கப்பூர் (3) கொரியா
(4) டிரிடேட் டுபகோ (5) உருகுவே **(…..)**

**39.** பின்வரும் விடைகளுள் எது, பல்தேசியக் கூட்டுத்தாபனங்களின் விரிவாக்கத்தினை ஊக்குவிக்கும் **மூன்று** காரணிகளைச் **சரியாகக்** காட்டுகின்றது?
(1) முதல் மூலதனம், உழைப்பு, போக்குவரத்து
(2) தொழில்நுட்பப் பரிமாற்றம், முதல் மூலதனம், மூலப்பொருட்களைப் பிரித்தெடுத்தல்
(3) முதல் மூலதனம், போக்குவரத்து, தொழில்நுட்பப் பரிமாற்றம்
(4) போக்குவரத்து, உழைப்பு, முகாமைத்துவம்
(5) தொழில்நுட்பப் பரிமாற்றம், முதல் மூலதனம், உள்ளுர் முகாமைத்துவம் **(…..)**

-A.Kajan

**40.** கீழே தரப்பட்டுள்ள சனத்தொகைக் கூம்பின் ஒரு பண்பாகக் கொள்ள **முடியாதது**




(1) அபிவிருத்தி நிலையில் மிகவும் பின்தங்கிய நாட்டுக்குரிய கூம்பாக விளங்குகின்றது.
(2) அபிவிருத்தியடைந்த நாட்டுக்குரிய கூம்பாக இது விளங்குகின்றது.
(3) எதிர்காலத்தில் மனிதவளம் தொடர்பான பிரச்சினையை எதிர்நோக்க நேரிடுதல்.
(4) பிறப்பு மற்றும் மரண வீதம் என்பன குறைவாகக் காணப்படுதல்.
(5) தங்கி வாழ்வோரில் முதியோர் தொகை உயர்வாகக் காணப்படுகின்றமை. **(…..)**

* * *

## பகுதி II

**1.** இலங்கை நில அளவைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட **1:50000** என்ற அளவுத்திட்டத்திலமைந்த **மாத்தறை** இடவிளக்கப் படத்தின் ஒரு பகுதி உமக்குத் தரப்பட்டுள்ளது. படத்தின் சமவுயரக்கோட்டு இடைவெளி **100** அடியாகும். இப் படத்தினைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடையெழுதுக.

> **குறிப்பு:**
> **படத்தின் மேல் விடைகள் எழுதப்படலாகாது.**
> விடைத்தாளில் தொடர்புடைய வினா இலக்கத்தினையும், உப பிரிவு இலக்கத்தினையும் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.
> உமது விடைத்தாளுடன் படத்தினை இணைக்க **வேண்டாம்.**

(i) படப் பிரதேசத்தில் இனங்காணத்தக்க **பிரதான** பண்பாட்டம்சத்தை அடையாளம் செய்க. **(02** புள்ளிகள்)

(ii) படப் பகுதியின் ஆகக்கூடிய உயரத்தை இனங்காட்டும் திரிகோணகணித நிலையத்தின் பெயரையும், அதன் உயரத்தையும் குறிப்பிடுக. **(02** புள்ளிகள்)

(iii) வெலிகம வாவியின் எல்லையைத் தீர்மானிக்கின்ற **A2** வீதிக்குச் சமாந்தரமாக, வாவிக்கு வடக்காகக் காணப்படும் பௌதிக நிலத்தோற்றத்தைப் பெயரிடுக. **(02** புள்ளிகள்)

(iv) படப் பகுதியில் பௌதிகக் காரணிகளின் செல்வாக்கிற்கு ஏற்ப, பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் விரிவடைந்திருக்கும் பாங்கினைப் பகுப்பாய்வு செய்க. **(09** புள்ளிகள்)

(v) படப் பிரதேசத்தில் **'வெலிகம'** பிரதேசத்தை அண்டியதாக அமைவுபெற்றுள்ள **ஆறு** பண்பாட்டம்சங்களை அடையாளம் செய்க. **(03** புள்ளிகள்)

(vi) படப் பகுதியில் **I** எனக் காட்டப்பட்டுள்ள கட்டத்திலுள்ள **B 466** வீதியினை, **1:75000** என்ற அளவுத்திட்டத்தில் வரைந்து காட்டுக. **(02** புள்ளிகள்)

**2.** அரசியல் எல்லைகளைக் காட்டும் உலகப்படமொன்று உமக்கு வழங்கப்பட்டுள்ளது. பொருத்தமான குறியீடுகள் **மற்றும்** நிறங்களைப் பயன்படுத்தி பின்வருவனவற்றைக் குறித்துப் பெயரிடுக.

(i) காப்பேத்தியன் மலை
(ii) சகாராப் பாலைவனம்
(iii) வெண்கடல்
(iv) டன்யூப் ஆறு
(v) **$80^o$** கிழக்கு நெடுங்கோடு
(vi) பிஸ்கே விரிகுடா
(vii) பீஜிங்
(viii) சார்க் அமைப்பின் தலைமைச் செயலகம் அமைந்திருப்பது.
(ix) **2019** இல் காட்டுத்தீயால் பெரிதும் பாதிக்கப்பட்ட அயனமழைக்காடு.
(x) பசுமைப்புரட்சியின் தாயகமாக விளங்கும் நாடு. **(10** புள்ளிகள்)

A.Kajan - A.Kajan

## பகுதி III

**3.** (i) **'விமான ஒளிப்படம்'** என்பதன் மூலம் நீர் விளங்கிக்கொள்வது யாது? **(02** புள்ளிகள்)

(ii) விமான ஒளிப்படமொன்றின் சிறப்பு **அல்லது** பயன்கள் **நான்கினை** அடையாளம் செய்க. **(02** புள்ளிகள்)

(iii) மேலே, **வினா** (ii) இல் உம்மால் அடையாளம் செய்யப்பட்டுள்ளவற்றுள், யாதாயினும் **இரண்டைத்** தெரிந்தெடுத்துச் சுருக்கமாக விளக்குக. **(05** புள்ளிகள்)

(iv) நவீன படவரைகலையியலின் அண்மைக்கால விருத்தியில் இனங்காணக்கூடிய, **மூன்று** முனைப்பான அம்சங்களை விவரிக்குக. **(06** புள்ளிகள்)


**4.** (i) **‘தரவு வரிசை** (Data array)’ என்றால் என்ன? **(02** புள்ளிகள்)


(ii) தரவு வரிசையின் **இரண்டு** பிரதான வகைகளையும் உதாரணம் ஒன்றின் மூலம் சுருக்கமாக விளக்குக. **(03** புள்ளிகள்)

(iii) மையப்போக்கு அளவைகளை அடையாளம் செய்வதுடன், அவற்றுள் யாதாயினும் **ஒன்றைத்** தெரிந்தெடுத்து சுருக்கமாக விளக்குக. **(04** புள்ளிகள்)

(iv) பின்வருவனவற்றுள் யாதாயினும் **இரண்டைத்** தெரிந்தெடுத்து, அதன் இயல்புகளை விவரிக்குக.
(அ) மேலமைந்தபார் வரைபடம்
(ஆ) வீச்சு
(இ) தரவு வங்கி **(06** புள்ளிகள்)

**5.** (i) கீழே **A மற்றும் B** என அடையாளம் செய்யப்பட்டுள்ள வரைபடங்களைச் **சரியாக** இனங்கண்டு பெயரிடுக. **(02** புள்ளிகள்)


**A**


**B**

(ii) மேலே, **வினா** (i) இல் **A** என்பதற்கு உம்மால் இனங்காணப்பட்ட வரைபட முறையின் **பிரதான** இயல்புகளைச் சுருக்கமாக ஆராய்க. **(04** புள்ளிகள்)

(iii) **“தேசப்படம்”** என்பதன் மூலம் நீர் விளங்கிக்கொள்வது யாது? **(02** புள்ளிகள்)

(iv) தேசப்படம் ஒன்றின் **நான்கு** முக்கிய அம்சங்களை அடையாளம் செய்வதுடன், அவற்றுள் யாதேனும் **இரண்டினைத்** தெரிந்தெடுத்துச் சுருக்கமாக விவரிக்குக. **(07** புள்ளிகள்)

**6. 2012** இல் கொழும்பு **மற்றும்** ஹம்பகா மாவட்டங்கள் தவிர்ந்த இலங்கையின் **23** மாவட்டங்களின் குடித்தொகை அடர்த்தியினை அட்டவணை காட்டுகின்றது.

| **மாவட்டம்** | **அடர்த்தி** | **மாவட்டம்** | **அடர்த்தி** |
|---|---|---|---|
| களுத்துறை | 772 | மட்டக்களப்பு | 201 |
| கண்டி | 715 | அம்பாறை | 153 |
| மாத்தளை | 247 | திருகோணமலை | 150 |
| நுவரெலியா | 414 | குருநாகல் | 348 |
| காலி | 655 | புத்தளம் | 264 |
| மாத்தறை | 637 | அனுராதபுரம் | 128 |
| ஹம்பாந்தோட்டை | 239 | பொலநறுவை | 131 |
| யாழ்ப்பாணம் | 628 | பதுளை | 287 |
| கிளிநொச்சி | 94 | மொனராகல | 81 |
| மன்னார் | 53 | இரத்தினபுரி | 334 |
| வவுனியா | 92 | கேகாலை | 497 |
| முல்லைத்தீவு | 38 | **மூலம்:** மத்திய வங்கி ஆண்டறிக்கை - 2013 | |

(i) மேலே தரப்பட்டுள்ள தரவுகளைப் பயன்படுத்தி பின்வருவனவற்றைக் கணிக்குக.
(அ) இடை
(ஆ) இடையம்
(இ) அரைக் காலணை வீச்சு **(04** புள்ளிகள்)

(ii) அட்டவணையில் தரப்பட்டுள்ள தரவுகளை இனங்காட்டுவதற்கு **பிரிக்கை வரைபு (Dispersion graph)** ஒன்றினை வரைக. **(07** புள்ளிகள்)

(iii) பிரிக்கை வரைபினை **(Dispersion graph)** அடிப்படையாகக் கொண்டு, **2012** இல் இலங்கையின் குடித்தொகை அடர்த்தியின் பிரதேச ரீதியான வேறுபாட்டுப் பாங்குகளைப் புள்ளிவிபர ரீதியாக விவரிக்குக. **(04** புள்ளிகள்)

A.Kajan